# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

பத்மனாபபுரம் நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் அங்கமாக தற்போது அரசு அறிவித்துள்ளதின் பேரில் பசுமை சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்க வேண்டி, **“திட மற்றும் திரவக் கழிவுகளை அறிவியல் ரீதியாக புதுமையான மற்றும் தொழில் நுட்ப அடிப்படையில் கையாளுதல் பற்றிய தீர்வுகளை செயலாக்க கட்டுரையாக சமர்ப்பிக்க தனி நபர்கள், சமூக ஆர்வவலர்கள், அரசு சாரா நிறுவனங்களை”** பத்மனாபபுரம் நகராட்சி சார்பில் அழைக்கப்படுகிறார்கள். இதில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.5 இலட்சம், 2-ம் பரிசாக ரூ. 2.5 இலட்சம், 3-ம் பரிசாக ரூ. 1.5 இலட்சம், 4-ம் பரிசாக ரூ. 1 இலட்சம், 5-ம் பரிசாக ரூ. 75000/- வழங்கப்படுகிறது. செயலாக்க தீர்வு கட்டுரையை இணையதளப் பதிவேற்றம் செய்ய கடைசி நாள். 06.01.2022. இதற்கான இணையதள முகவரி **<u>www.swachhbharaturban.gov.in</u>.** எனவே தனி நபர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மேற்படி தீர்வுக்குரிய செயலாக்க கட்டுரைகளை மேற்கூறிய இணையதளத்தில் அல்லது பத்மனாபபுரம் நகராட்சி ஆணையாளரிடம் 05.01.2022-க்குள் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. இது குறித்த விபரம் நகராட்சி இணையதளத்தில் **<u>(www.tnurbantree.tn.gov.in/padmanabhapuram/)</u>**பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படிக்கான விபரங்களை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் நேரிலும் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

ஆணையாளர்
பத்மனாபபுரம் நகராட்சி